செய்தி வெளியீடு எண்:20 நாள்:12.01.2021

## செய்தி வெளியீடு

# தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் அவற்றிற்கான தரமான சிகிச்சை மேலாண்மையின் அவசியம் குறித்து கருத்தரங்கம் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் தலைமையில் 12.01.2021 அன்று நடைபெற்றது

மக்களிடையே தொற்றா நோய்கள் அதிகரித்து வருவது குறித்தும், அவற்றின் விளைவுகள் குறித்தும், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்களின் தலைமையில் ஒரு இணைய வழி கருத்தரங்கம் 12.01.2021 அன்று நடத்தப்பட்டடது. இக்கருத்தரங்கில், தொற்றா நோய்களின் அதிகரிப்பிற்கான காரணங்கள் குறித்தும் இதனை ஆங்கில மருத்துவமுறை, இயற்கை மருத்துவ முறை மற்றும் ஊட்டச் சத்து மிக்க உணவினை உட்கொள்ளுதல் மற்றும் ஆரோக்கியமான உணவு உட்கொள்ளும் நெறிமுறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட துறை சார்ந்த வல்லுநர்களும் துறை அலுவலர்களும் இணைய வாயிலாக பங்கேற்றனர்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்று பேசியதுடன், இக் கருத்தரங்கின் முக்கிய குறிக்கோளை சுருக்கமாக எடுத்துரைத்தார். மேலும், அவர், இந்த தொற்றா நோய் தாக்கம் காரணமாக தனிநபர்களின் நிதிச் சுமை அதிகரிப்பது எனவும், அதேபோல், மாநிலத்தின் பொருளாதாரத்திலும் இதன் தாக்கம் எதிரொலிக்கிறது என்பது குறித்தும் தனது கவலையை வெளிப்படுத்தினார்.

மருத்துவர் ஜெரார்டு செல்வம், இணை இயக்குநர் (நல்வாழ்விற்கான கல்வி ஆணையம்), பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை மற்றும் தொற்றா நோய்களுக்கான மாநில முகமை அலுவலர், தேசிய சுகாதார திட்டம் அவர்கள், தொற்றா நோய்களினால் உண்ணடாகும் பல்வேறு ஆபத்துகள், அரசின் இடையீடு மற்றும் இதனை கட்டுப்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து விளக்கப் படக்காட்சி மூலமாக விவரித்தார்.

பேராசிரியர் (மருத்துவர்) என். மணவாளன், இணை இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதி இயக்குநரகம் மற்றும் முதல்வர், யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி அவர்கள், தொற்றா நோய்களின் தடுப்பிற்காகவும் அவற்றின் மேலாண்மைக்காகவும் விரிவான மருத்துவ அணுகுமுறையை உருவாக்குவதில் யோகா மற்றும் இயற்கை சார்ந்த மருத்துவத்தின் பங்களிப்பினை விளக்கப் படக்காட்சி மூலமாக எடுத்துரைத்தார்.

திருமதி. ரேகா தீனன், சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து நிபுணர் அவர்கள், தொற்றா நோய்களை தடுப்பதிலும் அவற்றின் மேலாண்மையிலும் ஆரோக்கியமான உணவு பழக்க நெறிமுறைகள் மற்றும் ஊட்டச் சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தை விவரித்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் மருத்துவத் துறையில் தலைசிறந்த நிபுணர்களான மருத்துவர். வெ. சாந்தா, தலைவர், அடையாறு புற்றுநோய் நிறுவனம் (மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் முன்னாள் உறுப்பினர்) அவர்களும் மற்றும் அரசு மகப்பேறு மருத்துவ நிலையத்தின் இயக்குநர் மருத்துவர் எஸ். விஜயா அவர்களும் தொற்றா நோய்களை தடுப்பது குறித்து தங்களது கருத்துக்களை தொடர்பாக பகிர்ந்து கொண்டனர்.

இதன் பின்னர், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்கள் தனது நிறைவுரையில், கருவுறுதல் வீதத்தில்

உண்டான குறைவு, குறைவான இறப்பு விகிதம், சராசரி ஆயுட்காலத்தில் உயர்வின் காரணமாக 60 வயதினை கடந்த மக்கள் தொகையின் விகிதாச்சரம் உயர்வு போன்ற காரணிகளால் தமிழகத்தில் மக்கள் தொகையில் மாற்றம் உண்டாகி வருவதாக குறிப்பிட்ட அவர், தமிழகம் மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் தொற்றா நோய்களினால் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்து கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, இதனை எதிர்கொள்வதற்காக, மக்களிடையே ஆரோக்கியமான உணவு பழக்கத்தினை ஊக்குவிப்பதற்காக அரசின் தேவையான இடையீடுகளை மேம்படுத்துவதன் அவசியத்தையும், மக்களின் நல்வாழ்விற்காக சிறந்த தரமான மருத்துவ சிகிச்சை அமைப்பினை உருவாக்கி மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை யும் வலியுறுத்தினார். மேலும், வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய வகையிலான மருத்துவ தரத்தினை மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. கருத்தரங்கின் தலைவர், கருத்துரையாளர்கள் மற்றும் பங்கேற்ற துறை அலுவலர்களுக்கு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் குழுமத் தலைவர் (சுகாதாரம் (ம) சமூக நலன்) நன்றி தெரிவித்தார்.

**மாநில வளர்ச்சி கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**